# ஒரு நிமிடம் உன் அருகினில் இருக்க

ஒரு நிமிடம் உன் அருகினில் இருக்க வருவாயோ என் இறைவா - ( 2 )
அந்த சிறு பொழுதே ஒரு யுகமாய் மாறும் அறியாயோ என் தலைவா

( ஒரு நிமிடம் )

**1**
விழிகளை மூடி உனை நினைக்கையிலே
விந்தைகள் நிகழ்வதும் ஏன் இறைவா (2)
மொழியினைத் தாண்டி மனமுறவாட
மகிழ்வினில் மிதப்பதும் ஏன் இறைவா
ஏன் இறைவா ஏன் இறைவா

(ஒரு நிமிடம்)

**2**
அளவில்லாத உன் அன்பினை நினைக்க
அழுகை வருவதன் நியாயமென்ன- ( 2 )
தொழுதுன்னை வணங்கி கவலைகள் கூற
சுமைகள் கரைந்திடும் மாயமென்ன
மாயமென்ன மாயமென்ன

(ஒரு நிமிடம்)

**3**
சோதர மானிடர் அழுகுரல் கேட்க
கேள்விகள் நிறைவது ஏன் இறைவா- (2)
வேதனை கண்டும் நீ காத்திடும் மௌனம்
விளங்கவில்லை அது ஏன் இறைவா
ஏன் இறைவா ஏன் இறைவா

(ஒரு நிமிடம்)